FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

1. District: NAMAKKAL | P.S. PUDUCHATRAM | Year 2025 | FIR No. 25 | Date: 27-01-2025

மாவட்டம் | காவல் நிலையம் | ஆண்டு | மு. த.அ.எண் | நாள்

2. Act(s) சட்டம் | Sections பிரிவுகள்

| Act(s) சட்டம் | Sections பிரிவுகள் |
|---|---|
| THE BHARATIYA NYAYA SANHITA (BNS), 2023 | 126 |
| THE BHARATIYA NYAYA SANHITA (BNS), 2023 | 324(2) |
| THE BHARATIYA NYAYA SANHITA (BNS), 2023 | 351(3) |

3. (a) Occurrence of Offence Day: SUNDAY | Date From: 15-09-2024 | Date To: -

குற்ற நிகழ்வு நாள் | நாள் முதல் | நாள் வரை

Time Period: On | Time From: 12:00 Hrs | Time To: -

நேர அளவு | நேரம் முதல் | நேரம் வரை

(b) Information received at PS. Date: 27-01-2025 | Time: 20:00 Hrs | (c) General Diary Reference: | Entry No(s)

காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | நேரம் | பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்

4. Type of Information: SUPERIOR OFFICER | Time : -

தகவலின் வகை | நேரம்

5. Place of Occurrence: (a) Direction and Distance from PS: EAST & 4.0 Km | Beat Number: BEAT 2

குற்ற நிகழ்விடம் (அ) காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் | முறைக் காவல் எண்

(b) Address: கண்ணூர்பட்டி நெறிஞ்சிக்காடு வாதியின் தோட்டத்தில்

முகவரி

(c) In case, outside limit of this Police Station,then the Name of P.S: - | District: -

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின் அந்நிலையில், அந்த கா.நி பெயர் | மாவட்டம்

6. Complainant/Informant (a) Name: PERUMAL | (c) Date/Year of Birth: 1964 | (d) Nationality: INDIA

குற்றமுறையீட்டாளர் / தகவல் தந்தவர் பெயர் | நாள் / பிறந்த ஆண்டு | நாட்டினம்

(b).Father's/Husband's Name: PERUMALGOUNDER

தந்தை / கணவர் பெயர்

(e).Passport No. | Date of Issue: | Place of Issue:

வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் | வழங்கப்பட்ட நாள் | வழங்கப்பட்ட இடம்

(f). Occupation: TEACHER

தொழில்

(g). Address: 32/9 B VIDHYALAYA ROAD, SEERANGAPALAYAM, SALEM DT, NOW AT:6/137/1 NERINJIKADU, WARD-8, KANNURPATTI,PUDUCHATRAM, NAMAKKAL DT

முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars

தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்.

1.வாதியின் சகோதரர் பெரியசாமி 2.பெரியசாமி மனைவி சாந்தி

8. Reasons for delay in reporting by the complainant/Informant:

குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்.

9. Particulars of the properties stolen/Involved:

களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம்.

10. Total value of properties stolen/Involved:

களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report/ Un-natural death Case No. If any:

பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம்

பணிந்தனுப்பப்படுகிறது: இன்று 27.01.2025 ஆம் தேதி 20.00 மணிக்கு புதுச்சத்திரம் காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது ஏற்கனவே நாமக்கல் கண்காணிப்பாளர் அலுவக நடப்புதாள் எண்: H2/3606/022537/2024 ன்படி கிடைக்கப்பெற்ற பெருமாள் என்பவரது புகாரினை பெற்று வழக்குப்பதிவு செய்ததின் விபரம் பின்வருமாறு: அனுப்புதல்: P.பெருமாள், தலைமையாசிரியர் (ஓய்வு) த/பெ.பெருமாள்கவுண்டர், குடியிருப்பு முகவரி: க.எண்.32/9B, வித்யாலயா ரோடு, சீரங்கபாளையம், சேலம் -636007. நிரந்தர முகவரி: கதவு நெ.6/137/1 நெறிஞ்சிக்காடு, வார்டு 8, கண்ணூர்பட்டி கிராமம், புதுச்சத்திரம், நாமக்கல் மாவட்டம். செல் எண்: 9842992372. பெறுதல்: உயர் திரு.காவல் துறை தலைமை இயக்குனர் அவர்கள், காவல் துறை தலைமையகம், தபால் பெட்டி எண்.601, டாக்டர் இராதா கிருஷ்ணன் சாலை, மைலாப்பூர் சென்னை -600004, அய்யா, பொருள்: என் குடும்ப சொத்து பாகப்பிரிவினைக்கு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் எனது சகோதரர் பெரியசாமி அவர் மனைவி சாந்தி ஆகிய இருவரும் அத்து மீறி என் வீட்டிற்குள் நுழைந்து எனக்கு சொந்தமான பொருட்களை சேதப்படுத்தியதும் திருடிச்சென்றதும், கூட்டுக்குடும்ப சொத்தில் இருந்து எனது கட்டிடத்திற்கு வரும் மின்இணைப்பை துண்டித்ததும், கூட்டு குடும்ப சொத்தான கிணற்றில் நீர் இறைக்க விடாமல் தடுத்ததும், நான் விவசாயம் செய்து வரும் நிலத்தில் வேலையாட்களை நுழைய விடாமல் தடுத்து பயிர்களை காய்ந்து அழியச்செய்து எனக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதும், என் குடும்ப சொத்தில் நான் நுழைந்தால் என்னைக்கொன்று விடுவேன் என்று என்னை மிரட்டியதும், மேற்படி நபர்கள் மீது காவல் துறையில் பலமுறை புகார் அளித்தும் எதிரிகள் செல்வாக்கினார் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பதும், எதரிகளால் என் உயிருக்கு ஆபத்தோ, அசம்பாவிதமோ எந்நேரமும் நேரலாம் என்பதால்- எதிரிகளான பெரியசாமி அவரது மனைவி K.சாந்தி ஆகியோரின் மீது உரிய நடவடிக்கை எடுத்து என் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு வழங்கி நீதி செலுத்த வேண்டி- மனு. நான் அரசு மேல்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். எனது சொந்த ஊர் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், கண்ணூர்பட்டி கிராமம் ஆகும். நான் தற்போது மேற்கண்ட முகவரியில் என் குடும்பத்துடன் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். 1 வது எதிரி பெரியசாமி எனது சகோதரர் ஆவார். 2 வது எதிரி K.சாந்தி எனது சகோதரர் பெரியசாமியின் மனைவி ஆவார். மேற்படி கண்ணூர்பட்டி கிராமத்தில் எனக்கும் எனது சகோதரர் பெரியசாமிக்கும் பாத்தியப்பட்ட இந்து கூட்டு குடும்ப சொத்து சுமார் 10.38 ஏக்கர் உள்ளது. நான் ஆசிரியராக பணிபுரிந்து வந்ததால், சேலத்தில் மேற்கண்ட முகவரியில் வாடகை வீட்டில் குடியிருந்து வந்து, அவ்வப்போது எனது சொந்த ஊருக்கு சென்று என் குடும்ப சொத்தில் உள்ள கதவு எண்-6/137 தார்சு வீட்டில் தங்கி வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அதேபோல் நான் குடியிருந்து வரும் தார்சு வீட்டிற்கு அருகில் உள்ள கோழிப்பண்ணையில் உள்ள அறையில் எனது தம்பியும் குடும்பத்துடன் வசித்து விவசாயம் செய்து வருகிறார். எனது தாயார் 2015 ம் ஆண்டும் எனது தந்தை 2020 ம் ஆண்டும் இறந்துவிட்டனர். நானும் எனது சகோதரரான பெரியசாமியும் மேற்படி எங்கள் குடும்ப சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வருவதில் பிரச்சனைகள் ஏற்படவே சட்டப்படி பாகப்பிரிவினை செய்துகொள்ளவேண்டி நான் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து தற்பொழுது நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. இந்த நிலையில் வழக்கபோல் நாள் கடந்த 15.09.2024 ம் தேதி பகல் சுமார் 12 மணி அளவில் சேலத்திலிருந்து என் குடும்ப சொத்தில் நான் குடியிருந்து வந்த எனது தார்சு வீட்டிற்கு சென்று விவசாய பணி செய்ய சென்றபொழுது எனது சகோதரர் பெரியசாமி கொடுவாளை எடுத்து என்னை வெட்ட வந்தும், எனது சகோதரரின் மனைவி சாந்தி கடப்பாரை கம்பியை எடுத்து என்னை தாக்க வந்தும், மேற்படி பொது குடும்ப சொத்திலே நுழைய கூடாது என்று என்னை மிரட்டியும், நான் குடியிருந்து வந்த தார்சு வீட்டின் கதவினை பூட்டுப்போட்டு பூட்டி என்னை எனது வீட்டிற்குள்ளே செல்லவிடாமல் இருவரும் தடுத்துவிட்டனர். அப்போது நான் எனது சகோதரர் பெரியசாமியிடம் “ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் பூட்டை திறங்கள்” என்று கேட்டதற்கு “நான் அப்படிதான் பூட்டுவேன் நீ இந்த சொத்திற்குள்ளேயே நுழையக் கூடாது” என்றும் “மீறி நுழைத்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன்” என்றும் என்னை மிரட்டினார். அவர்களால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று பயந்து அங்கிருந்து கிளம்பிவிட்டேன். பின்னர் நான் ஜன்னல் வழியாக எனது வீட்டிற்குள் பார்த்தபோது, ஏற்னவே நான் பூட்டுபோட்டு பூட்டி வைத்திருந்த மேற்படி எனது தார்சு வீட்டிற்குள் கள்ளசாவி போட்டு திறந்து அத்துமீறி உள்ளே நுழைந்து இருந்த எனக்கு சொந்தமான பொருட்களை சேதப்படுத்தியும், சுமார் ரூ.3000/- மதிப்புள்ள கட்டிலை உடைத்து சேதப்படுத்தியும், சுமார் ரூ.500/- மதிப்புள்ள பிளாஸ்டிக் பக்கட் பாத்திரங்கள் ஆகியவற்றை அவர்கள் எடுத்து சென்றுவிட்டது தெரிந்தது. அதுமட்டுமின்றி, எனது வீட்டிற்குள் எனது மகளின் திருமணத்திற்காக நான் சேர்த்து வைத்துள்ள நகைகள், துணிமணிகள் இருந்தன. அவற்றையும் இவர்கள் சேதப்படுத்தி உள்ளனர். மேலும், மேற்படி எனது தார்சு வீட்டின் ஹாலில் இருந்து எனது வீட்டிற்குள் செல்லும் மின் இணைப்பு மின் ஒயரை சேதப்படுத்தி எனது வீட்டிற்கு வரும் மின்சாரத்தை பெரியசாமியும் மனைவி சாந்தியும் துண்டித்துள்ளார்கள். மேற்படி சொத்தில் எனக்கும் எனது சகோதரர் பெரியசாமிக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட 24 தென்னை மரங்கள் மற்றும் வாழை மரங்கள் இருந்து வருகிறது. இதில் இருந்து வரக்கூடிய தேங்காய்கள் மற்றும் வாழைத்தார்கள் ஆகியவற்றை நானும் எனது சகோதரரும் சரிபாதியாக பிரித்து எடுத்து கொண்டு வந்துள்ளோம். இவ்வாறு இருக்கையில் எனது சகோதரர் பெரியசாமி மனைவி சாந்தி எனக்கு முழுவதுமாக இழப்பினை ஏற்படுத்தவேண்டி கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு இருவரும் சேர்ந்து ஒரு பெரியசாமி (மரம் ஏறும் நபர்) என்பவரை அழைத்து வந்து 24 தென்னை மரங்களில் இருந்து 1200 தேங்காய்களை பறித்து திருடிச்சென்று அதனை வேறு நபரிடம் விலைக்கு விற்றும் அதேபோல் சுமார் 1500 மதிப்புள்ள இரண்டு வாழை தார்களை எதிரிகள் இருவரும் வெட்டி எடுத்து விலைக்கு விற்றும், மேற்படி முழுத்தொகையும் சட்டத்திற்கு முரணாக இருவருமே பயன்படுத்திக்கொண்டார்கள். மேற்படி சொத்தில் எனக்கும் எனது சகோதரருக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட கிணறு மற்றும் போர்வெல் உள்ளது. இதில் இருந்து நாங்கள் இருவரும் மின்மோட்டார் மூலம் தண்ணீரை எடுத்து விவசாயம் செய்து வருகிறோம். ஆனால் எனது சகோதரரான பெரியசாமி அவரது மனைவி சாந்தியும் மேற்படி பொதுவாக பாத்தியப்பட்ட கிணறு மற்றும் போர்வெல்லில் இருந்து நான் தண்ணீரை எடுத்து பயன்படுத்தி விவசாயம் செய்து வருவதை முழுமையாக தடுத்து என்னை வெளியேற்ற எண்ணம் கொண்டு நான் தண்ணீர் எடுத்துவிட முடியாத அளவிற்கு போர்வெல் மின்மோட்டார் ரூம்மை பூட்டுப்போட்டு பூட்டி நான் எனது விவசாய நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சும் உரிமையை முழுவதுமாக தடுத்துவிட்டார்கள். இதனால், நான் பயிரிட்ட விவசாய பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சல் இல்லாமல்

காய்ந்து வருகிறது. ஏற்னவே எதிரிகள் மீது இதற்கு முன்பு 01.06.2024 மற்றும் 08.06.2024 ஆகிய தேதிகளில் புதுச்சத்திரம் காவல் நிலையத்தில் புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டும் இது வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் கடந்த 17.09.2024 தேதி காலை சுமார் 9 மணி அளவில் ரத்தினவேல் என்பவர் எனது தோட்டத்திற்கு விவசாயப்பணி செய்வதற்காக சென்றபொழுது எதிரிகள் இருவரும் சேர்ந்து அவரை தோட்டதிற்குள் நுழையவிடாமல் தடுத்துவிட்டனர். மேற்படி எதிரிகளின் செயலால் எனது விவசாய நிலத்த்தில் உள்ள பயிர்கள் எல்லாம் காய்ந்துவிட்ட நிலையில் எனக்கு பெரும் நஷ்டமும் மன உளைச்சலும் ஏற்பட்டுள்ளது. மேலும் நான் என் சொந்த ஊரில் உள்ள வீட்டிற்கு சென்றால், எதிரிகளால் எனது உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து ஏற்படும் என்ற சூழ்நிலையில், நான் எப்பொழுதும் போல் எனது வீட்டில் குடியிருந்து தண்ணீர் எடுத்து விட்டு விவசாயம் செய்து வருவதை எதிரிகள் தடுத்து மிரட்டாமல் பாதுகாப்பு வழங்கியும் எதிரிகளின் குற்றச் செயலுக்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டியும் காவல் துறையில் கடந்த 24.09.2024 தேதியில் மனு அளித்தேன். என் குடும்ப சொத்து பாகப்பிரிவினைக்கு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் எதிரிகள் பொதுவில் இருக்கும் மரங்களில் இருந்த காய்களையும், வாழைத்தார்களையும் விற்று எனக்கு சேரவேண்டிய பங்குத் தொகையை தராமல் என்னை ஏமாற்றியதும், எதிரிகள் அத்துமீறி என் வீட்டிற்குள் நுழைந்து எனக்கு சொந்தமான பொருட்களை சேதப்படுத்தியதும், திருடிச்சென்றதும், கூட்டுக்குடும்ப சொத்தில் இருந்து எனது கட்டிடத்திற்கு வரும் மின் இணைப்பை துண்டித்ததும் கூட்டு குடும்ப சொத்தான கிணற்றில் நீர் இறைக்க விடாமல் தடுத்ததும், நான் விவசாயம் செய்து வரும் நிலத்தில் வேலையாட்களை நுழைய விடாமல் தடுத்து பயிர்களை காய்ந்து அழியச் செய்து எனக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதும், என் குடும்ப சொத்தில் நான் நுழைந்தால் என்னைக்கொன்று விடுவேன் என்று என்னை மிரட்டியதும் குற்றமாகும். மேற்படி எதிரிகளான பெரியசாமி அவர் மனைவி சாந்தி ஆகியோர் மீது பலமுறை புகார் மனு அளித்தும் இதுவரை எதிரிகளின் செல்வாக்கின் காரணமாக புகார் குறத்து இதுநாள் வரை எந்த வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால், என் உயிருக்கு எந்த நேரத்திலும் எதிரகளால் ஆபத்து நேரலாம் என்ற சூழ்நிலையில் பயத்துடன் இருந்து வருகிறேன். இந்த சூழ்நிலையில் என் உயிருக்கு ஏதேனும் ஆபத்தோ, அசம்பாவிதமோ நேர்ந்தால் அதற்கு எதிரிகளான பெரியசாமி அவர் மனைவி சாந்தி ஆகியோர்தான் காரணம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, சமூகம் அவர்கள் மேற்படி எதிரிகளான பெரிசாமி, அவர் மனைவி K.சாந்தி ஆகியோரின் மீது உரிய நடவடிக்கை எடுத்து என் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு வழங்கி நீதி செலுத்த பணிவுடன் வேண்டுகிறேன். இப்படிகசு sd(xxxx) Perumal 11/11/24. இடம்: நாமக்கல், நாள்: 11/11/2024 இணைப்பு காவல் துறைக்கு நான் அளித்த புகார் மனுக்கள்-நகல். நகல்: 1.உயர் திரு.உள்துறை செயலாளர் அவர்கள், தலைமை செயலகம், கோட்டை, சென்னை-600009. 2.உயர் திரு.காவல் துறை தலைவர் அவர்கள், மேற்கு சரகம், ரேஸ்கோர்ஸ், காலை, தாமஸ்பார்க், கோமுத்தூர் -641018. 3.உயர்திரு.காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள், நாமக்கல் மாவட்டம். 4.உயர் திரு. காவல் துறை ஆய்வாளர் அவர்கள், புதுச்சத்திரம் காவல் நிலையம், நாமக்கல் மாவட்டம். மேற்படி வாதி கொடுத்த புகாரின் பேரில் புதுச்சத்திரம் காவல் நிலைய குற்ற எண்: 25/2025 U/S 126,324(2),351(3) BNS ஆக வழக்குப்பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகாரையும் இணைத்து கனம் JM-II நாமக்கல் அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் இவ்வழக்கை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

13. Action Taken: Since the above report reveals Commission of Offence(s) u/s as mentioned in item No.2, registered case and took up the investigation.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2 -ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

FIR read over to the Complainant/Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant/Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant/Informant

குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station

காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 27-01-2025

நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: PALANISAMY A

பெயர்

Rank: SSI OF POLICE No. 311

நிலை எண்

This is an Authentic copy of System Genrated FIR downloaded from TN Police Website (www.eservices.tnpolice.gov.in)

on 4/2/2025 at 3:54:59 am